
செம்மணி

நிலம் 3 துகள் 151 வள்ளுவர் ஆண்டு 2052, 10 - 16 ஆனி 2023 வாரமலர் பக்கங்கள் 17



# கஜேந்திரகுமாரின் கைது சொல்லும் செய்தி....?

கார்த்தீ

சிங்கள ஆட்சியாளர்களும், சிங்களவர்களும் பிரபாகரனுக்கு மட்டுமே பயந்தார்கள். அவர் உயிருடன் இருக்கும்வரை நாடாளுமன்ற அரசியலுக்கு வரப்போவதில்லை எனவே தாங்கள் நாடாளுமன்ற அரசியலை நிம்மதியாக நடத்த முடியாது என்று தமிழ் அரசியல் தரப்பினரும் தெரிந்துகொண்டார்கள். ஜெ.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த எனச் சிங்களத் தலைவர்கள் எல்லோருமே பிரபாகரனுக்குப் பயந்தார்கள். ரணிலுக்கும் உள்ளூரப் பயம் இருந்தது. அதைக் காட்டிக்கொள்ளாத ரணிpல் பிரபாகரனை நேரடியாகப் பகைக்காது மூளையால் செயற்பட்டுப் புலிகள் அமைப்பிலிருந்து கருணாவைப் பிரித்தெடுத்தார். அந்த அமைப்பைப் பலவினப்படுத்தி அழித்தார். புலிகளை அழித்தது ரணில் - மகிந்த எனப் பிரித்துப் பார்க்கத் தேவையில்லை. சிங்களத் தலைவர்கள் தமது இனத்துக்கும் பௌத்த மதத்துக்கும் பிரச்சினையாக இருக்கின்ற விடயத்தில் ஒற்றுமையாகச் செயற்படுகின்றனர். அந்தப் பின்னணியிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினுடைய கைதும் நடந்தேறியுள்ளது.

**விடுக்கப்பட்ட செய்தி...!**

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைக் கைது செய்தது என்பது ஒரு குறியீட்டு வடிவமான செய்தியை வெளிப்படுத்துவதற்காகவே. ஆயுதம் தாங்கிப் போராடிய பிரபாகரனையே அழித்துவிட்டோம், நீங்கள் எல்லாம் ஒரு பொருட்டல்ல என்று உணர்த்துவதே இந்தக் கைதின் உள்நோக்கமாகும். ஒற்றையாட்சியின் கீழ் எதுவும் வேண்டாம் என்று வாதிட்டு வரும் கஜேந்திரகுமார் மீது கை வைத்தமையும் அதனால்தான்.

கஜேந்திரகுமாரின் அரசியல் போக்கு ஏனைய தமிழ்த் தலைவர்களின் அரசியலைவிட வித்தியாசமானது. கிட்டத்தட்டப் புலிகள் கோரிய தமிழீழத்துக்கு ஒப்பான அரசியலையே கஜேந்திரகுமார் முன்னெடுத்து வருகிறார். ஒற்றையாட்சியின் கீழ் எமக்குத் தீர்வு வேண்டாம் என்பதாக அவருடைய சித்தாந்தம் இருக்கிறது. அவரது அரசியல் சசித்தாந்தமானது ஏனைய தமிழக் கட்சிகளின் ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பதிலிருந்தும், 13இற்குள் தீர்வு

காண்பதிலிருந்தும் வேறுபட்டது - எதிரானது. கஜேந்தி ரகுமாரை மடக்குவது என்பது சிங்கள ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்லாது சில தமிழ்த் தலைவர்களுக்கும் தேவையாக இருக்கிறது. அவரது கட்சியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் தையிட்டி விகாரை எதிர்ப்பு விடயம், மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விவகாரம் என எல்லாவற்றிலும் களமிறங்கிச் செயற்பட்டுவருகிறார். இதன் பிரதிபலனாகவே அந்தக் கட்சியின் தலைவரும், பெரும் புள்ளியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மீது கை வைக்கப்பட்டுள்ளது. அவர் மீது கை வைக்கவேண்டும் என்கிற சிங்கள ஆட்சியாளரின் நீண்ட காலத் திட்டத்துக்குப் பரீட்சை நிலையத்துக்கு அருகில் கூட்டம் வைத்தார் கல கம் செய்தார் என்ற சாட்டுக்கள் வாய்ப்பாக அமைந்தன.

**அரசியல் செல்வாக்கு**

தமிழ் அரசியல்வாதிகளுக்கிடையில் தனக்கெனத் தனிச் சித்தாந்தத்துடன் மிளிரும் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் மிகவும் செல்வாக்கு மிக்க குடும்பத்தில் பிறந்தவர். அவரது பேரனான ஜி.ஜி.பொன்னம்பலம் உலகப் பிரசித்தி பெற்ற ஒரு சட்டத்தரணி. அவரது காலத்தில் அவர் கொழும் பில் வைத்திருந்த சொத்துகள் அதிகம். மலேசியாவிலும் இங்கிலாந்திலும்கூட அவருக்குச் சொத்துக்கள் உள்ளன. பண்டாரநாயக்காவுடன் இங்கிலாந்தில் ஒன்றாகப் படித் தவர் என்றும் சொல்லப்படுகிறது. இதனால் அவர்கள் குடும்ப நண்பர்களும்கூட. கஜேந்திரகுமாரின் தந்தையான குமார்பொன்னம்பலத்தைக் "களு புத்தா" (கறுப்பு மகன்) என்று பண்டாரநாயக்கா குடும்பம் அழைத்தது என்றும், அனுர பண்டாரநாயக்காவைச் "சுது புத்தா" (வெள்ளை மகன்) என்று பொன்னம்பலத்தின் குடும்பத்தினர் பரஸ்பரம் அன்பாக அழைத்தனர் என்றும் கதைகளுண்டு. முன்னாள் அரசலைவர் சந்திரிகாவுடனும் அவர்களுக்கு நல்ல உறவி ருந்தது. இவ்வாறாக அரசியல், பணம், சிங்கள உறவுகள் எனச் செல்வாக்கு மிக்க குடும்பத்தவர் கஜேந்திரகுமார். இதுபோன்ற பலமான பின்னணி ஏனைய தமிழ்த் தலை வர்களுக்கு இல்லை. அத்தகைய அரசியல்வாதியையே சிங்கள ஆட்சியாளர்கள் "தட்டித் தூக்கியுள்ளனர்".

**வாக்குமூலம் பெறுவதற்காகக் கைது**

கஜேந்திரகுமாருக்குப் "பென்ஸ் கஜன்" என்றும் ஒரு பட்டப் பெயர் உண்டு. பென்ஸ் கார்கள் பலவற்றை அவ ரது தந்தையான குமார் பொன்னம்பலம் வைத்திருந்து அவை இவரது கைக்கு மாறின. இதனாலேயே அவ்வாறு அழைக் கப்பட்டார். அவ்வாறான வாகன வசதியுள்ள ஒருவரைக் காவல்துறை வாகனத்தில் ஏற்றி அவமதிக்க வேண்டும் என்பதும் ஆட்சியாளர்களின் அற்ப நோக்கமாக இருந்தது என்றும் தெரிகிறது. ஒருவரைக் கைது செய்வது என்பது கைவிலங்கை மாட்டி இழுத்துச் செல்வதை மாத்திரம் குறிக்காது. தான் வசிக்கும் வீட்டை விட்டு வெளியேற விடாது வைத்திருப்பது, காவல்துறை வாகனத்தில் ஏற்றுவது, யாரை யும் சந்திக்க விடாது தடுப்பது என்பனவெல்லாம் கைது என்ற தரத்தில் வைத்து நோக்கக்கூடியவையே. அதனால் தான் கஜேந்திரகுமாரைக் கொழும்பில் வைத்துக் காவல் துறை வாகனத்தில் ஏற்றிக் கிளிநொச்சி வரை கொண்டு வந்தார்கள். கஜேந்திரகுமார் தனது கைதைத் தவிர்ப்பதற் காகச் சபாநாயகரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டி ருந்த போதிலும் அது நடக்கவில்லை. இது விடயத்தில் அரசதலைவர் ரணில் விக்கிரம சிங்க வாய் திறக்கவில்லை.



ஒரு வாக்குமூலம் பெறுவதற்காக மட்டும்தான் இந்த நடவடிக்கை என்றால் கொழும்பில் வைத்தே கஜேந்திரகுமாரின் வாக்குமூலத்தை மருதங்கேணிக் காவல்துறைத்தரப்பினர் பெற்றிருக்க முடியும். ஆனால், அவரைக் கைது செய்து கிளிநொச்சிக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் அவர்கள் குறியாக இருந் தது தெரிகிறது. அவர் கைது செய்யப்பட்டு விட்டார் என்றதுமே இனிப் பிணையில் விடப்பாடுவார் என்பதும் பலருக்குத் தெரிந்த விடயமாயிருந்தது.

**பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணை**

கிளிநொச்சியில் வைத்துப் பிணை வழங்கப் பட்ட பின்னர் ஊடகங்களுக்குச் செவ்வியளித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரசு மீதான பன்னாட்டு விசாரணைகளை முடுக்கிவிட வேண்டும் என்றார். அவர் சட்டத்தரணியாக இருந்தபோதி லும் போர் முடிந்து இன்றைக்கு 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில்கூட இறுதிப்பேரில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் 1லட்சத்து 40ஆயிரம் மக்கள் தொடர்பிலோ, படையினர் இழைத்த போர்க்குற்றங்கள் தொடர்பிலோ, துன்புறுத்தல்கள், பாலியல் கொடூரங்கள் தொடர்பிலோ இதுவரை ஒரு வழக்கைகூட நீதிமன்றில் பதிவு செய்த தாகத் தெரியவில்லை. அவ்வாறு பதிவு செய்து அந்த வழக்கில் தவறான தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டால் மாத்தி ரமே அந்தத் தீர்ப்பை மேன்முறையீடு செய்து பன்னாட்டு நீதிமன்றுக்குப் பாரப்படுத்த முடியும். இந்த விடயத்தில் விக்கினேஸ்வரனோ, சுமந்திரனோ வேறு தமிழ் அரசி யல்தரப்புச் சட்டத்தரணிகளோ இலங்கை அரசுக்கு எதிரா கக் களமிறங்கவில்லை.

கஜேந்திரகுமாரின் கைது என்பது எமக்கு யாரும் ஒரு பொருட்டல்ல என்பதையும் கொழும்பில் சொத்துக்களை வைத்திருக்க வேண்டுமானால் பொத்திக்கொண்டு இருக்க வேண்டும் என்ற மறைமுகச் செய்தி ஒன்றையும் அனைத் துத் தமிழ்த் தலைவர்களுக்கும் விடுத்திருப்பது தெரிகிறது. இதுதான் ரணிலின் நிர்வாகம் என்பதாகவும் காட்டப்பட்டி ருக்கிறது.

# "இந்துமதியைக் கைப்பற்றினோம்..."

மொழியாக்கம்
கமலநாதன்



(கடந்த வாரத் தொடர்ச்சி)

கடற்புலிகள் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து மிக வேகமாக எம்மைநோக்கி வந்து தாக்குதல்களை நடத்திவிட்டு மிக வேகமாக திரும்பிச் சென்று விடுவது வழக்கம். அதற்கு இடம்கொடுக்காது போக்குக் காட்டி, அவர்களை அலைக்கழித்தோம். பின்னர் மாலை 6.30மணிக்குப் புலிகளின் முதலாவது படகைத் தாக்கி அழித்தோம். அதன் பின்னர் இரண்டாவது, மூன்றாவது படகுகளையும் அழித்தோம். இந்தச் சண்டை ஆரம்பித்த நேரத்தில் கிழக்குக் கடற்பரப்பில் பணியில் ஈடுபட்டிருந்த மற்றோர் கடற்படை அணியும் வந்து எம்முடன் இணைந்து கொண்டது. அதன் பின்னர் புலிகளின் இந்துமதி என்ற தாக்குதல் கப்பலைக் கைப்பற்றினோம். நாம் கைப்பற்றி அந்தக் கப்பலுக்குள் கடற்புலிகளின் 8 சடலங்களை எடுத்தோம். லெப்ரினன் பண்டாரவின் கப்பலில் இருந்து நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதல்களே புலிகளின் படகுகளை அதிகம் சேதப்படுத்தியிருந்தன.

**மரபு ரீதியான போர் முறை பயன்படவில்லை**


கடற்புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குக் கடற்படையினருக்கு வழங்கப்பட்டிருந்த மரபு வழிக் கடற்படைப் பயிற்சி போதுமானதாக இருக்கவில்லை. அதற்காக அசிமெற்றிக் கோ ஃபயர் (மரபு வழியில் போராடாத ஒரு குழுவினருடன் போராடுவதற்காக மரபு விதியற்ற தாக்குதல் முறையைப் பயன்படுத்துவது) என்ற யுக்தியைக் கையாண்டோம். கடற்படைத் தளபதியாகப் பின்னர் பணியாற்றிய அட்மிரல் சின்னையா போன்ற பல உயர் அதிகாரிகள் இந்த விடயத்தில் எமக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள். அதில் போரின் தன்மை, அதன் வேகம், சூட்டுப் பலம், எதிரியின் பலம், கால அவகாசம், எந்த நேரத்தில் தாக்கினால் எமக்கு வெற்றி கிடைக்கும் என்பது போன்ற பல விடயங்களை அனுபவ ரீதியில் கையாள வேண்டியிருந்தது. இத்தகைய நுட்பமான அணுகுமுறைகளாலேயே கடற்புலிகளை எம்மால் வெல்ல முடிந்தது.

குழுக்களாகச் செயற்பட்டுத் தாக்குதலை மேற்கொள்ளும் முறையும் இதில் அடங்கும். புலிகள் முதலில் ஓர் அணியாக வந்து தாக்குவார்கள். பின்னர் இன்னோர் அணியாக வந்து தாக்குவார்கள். அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதைக் கற்றுக்கொண்டோம். வடக்கிலிருந்த படையினருக்கும் மக்களுக்குமான உணவுப் பொருள்களைக்கூடக் கப்பலில் ஏற்றிச் செல்ல வேண்டிய நிலையிருந்ததால் அதைப் புலிகள் தாக்கிவிடாதபடி பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கிருந்தது. புலிகள் படையினரின் வழங்கல்களைத் தடுப்பதில் அதிக முயற்சி எடுத்திருந்தபோதிலும்



# தீராக் காதல்

ஜெய், ஐஸ்வர்யா ராஜேஷ், ஷிவதா உள்ளிட்ட பலரின் நடிப்பில் ரோகின் வெங்கடேசன் இயக்கத்தில் வெளியாகியிருக்கும் படம் தீராக் காதல். பிரிந்த காதலர்கள் - தமக்கான குடும்ப வாழ்வை வௌவேறாக ஏற்படுத்திய பின்னர் அவர்கள் மீண்டும் சந்திக் கையில், அந்தச் சந்திப்பு மீண்டும் ஒரு காதல் வாழ்க்கையைச் சாத்தியப்படுத்துமா என்பதுதான் 'தீராக்காதல்' படத்தின் கதை.



**கதை**

கௌதமுக்கு (ஜெய்) மங்களூரு செல்லவேண்டிய தேவை. அந்த ரயில் பயணத்தில் எதிர் பாராதவிதமாகக் கல்லூரிக் காலக் காதலி ஆரண்யாவை (ஐஸ்வர்யா ராஜேஷ்) சந் திக்கிறார். இருவரும் தங் களது தற்போதைய திருமண வாழ்க்கை, பழைய நினை வுகள் என அங்கிருக்கும் சில நாள்கள் நேரில் சந்தித்து உரையா டுகிறார்கள்.

அன்பான மனைவி, அழகான குழந்தை, நல்ல வேலை என இருந்தாலும் வேலை பரபரப்புக்கு இடையில் இயந்திரமாக வாழும் வாழ்க்கை ஜெய்க்கும் அவர் மனைவி ஷிவதாவுக்கும். குடும்ப வன் முறையில் சிக்கி இருக்கிறார் ஐஸ்வர்யா ராஜேஷ். இப்படியான சூழலில்

கடல் மார்க்கத்தைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்வதற்கு நாம் அனுமதிக்க வில்லை. இத்தகைய நடவடிக் கைகளில் ஈடுபட்ட 49 கடற் படை அதிகாரிகளையும் 258 கடற்படையினரையும் நாம் இழந்திருக்கிறோம்.

**பிரபாகரன் கடற்புலிகளை நம்பினார்**

மூன்றாவது ஈழப்போர் ஆரம்பமாகியபோது புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது கடற்படைத் தளபதியான சூசையிடம், இனி நடக்கப் போகும் போரில் கடற்புலிகளின்




செயற்பாடுகளே அதிக முக்கி யம் பெறவிருக்கிறது - என்று குறிப்பிட்டிருந்தார். அதன் முக்கிய நோக்கமாக இருந்தது, மருந்து வழங்கல், வெடி மரு ந்து, உபகரணங்கள் படையின ருக்குக் கிடைக்காதவாறு கடற் படை மீதான தாக்குதலை வலுப் படுத்துவதாகும். அதற்காகத் தான் புலிகள் பல்வேறு வகை யாகக் கடற்கலங்களை வடிவ மைத்திருந்தார்கள். போர் முடிவுற்றதும் அவர்களின் இர கசியக் கடற்படைத் தளவாடங் களை மக்கள் பார்க்க முடிந்தது. அவற்றை வைத்துக் கிழக்குக் கடற்பரப்பைத் தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க முயன்றார்கள். அது சாத்தியப் பட்டிருந்தால் வடக்கில் படை யினரால் எதுவும் செய்ய முடி யபாத நிலை ஏற்பட்டிருக்கும். புலிகளின் திட்டத்தை முறி யடிப்பதற்காகவே கிழக்குக் கடலையும் வடக்குக் கடற் பரப்பையும் மிக இறுக்கமாக வைத்திருந்தோம்.

(மிகுதி அடுத்த வாரம்)

பல வருடங்களுக்குப் பிறகு இவர்கள் இருவரது சந்திப்பும் அவர்களுக்கு ஆறுதலாக அமைகிறது.

மங்களூருவில் இருந்து சென்னை திரும்பியதும் இருவரும் சந்தித்துக்கொள்ள வேண்டாம் என முடிவெடுக்கிறார்கள். ஆனால், ஒரு கட்டத்தில் குடும்ப வன்முறை தாங்காமல் அதில் இருந்து வெளியே வரும் ஐஸ்வர்யா ராஜேஷ், இணைந்து வாழலாம் என ஜெய்யை வற்புறுத்துகிறார். ஜெய் மறுக்கிறார். ஆனா லும் விடாமல் துரத்துகிறார் ஐஸ்வர்யா ராஜேஷ். ஜெய் - ஐஸ்வர்யா இணைந்தார்களா, ஜெய் குடும்பம் என்ன ஆனது? என்பதுதான் 'தீராக்காதல்'.



**பாத்திரங்கள்**

மனைவியின் அன்பிலும், முன்னாள் காதலியின் காதல் துரத்தலிலும் சிக்கித் தவிக்கும் கதாபாத்திரம் ஜெய்க்கு. சோகம், கோபம், மகிழ்ச்சி, இயலாமை என அனைத்து உணர்ச்சிகளையும் காட்டிச் செல்கிறார். பல காட்சிகளில் கதாநாயகியை விட அவர் போட்டிருக்கும் அதிக மேக்கப் திரையில் உறுத்துகிறது. கதாநாயகியை மையப்படுத்தி வெளிவந்த தன்னுடைய படங்களுக்கு இடையில் நீண்ட நாட்களுக்கு பிறகு இப்படியான கதையில் ஐஸ்வர்யா ராஜேஷ் குறை சொல்ல முடியாத நடிப்பைக் கொடுத்திருக்கிறார். நீண்ட நாள்களுக்குப் பிறகு வந்திருக்கும் ஷிவதா தன் நடிப்பால் கவனிக்க வைத்திருக்கிறார். பேபி வ்ரித்தி விஷால், அப்துல் லீ, அம்ஜத் கான் என அனைவரும் தங்களுக்கு கொடுத்த கதாபாத்திரத்தை சிறப்பாகச் செய்திருக்கின்றனர்.

**பலம் - பலவீனம்**

குறைவான கதாபாத்திரங்கள், இதுபோன்ற படங்களுக்குத் திரைக்கதையும் வசனங்களும் சுவாரஸ்யமாக இருப்பது முக்கியம். ஆனால், ரோகின் வெங்கடேசன், ஜி.ஆர்.சுரேந்திரநாத் கூட்டணியில் முதல் பாதி திரைக்கதை மெதுவாகவும் எந்தவிதமான சுவாரஸ்யம் இன்றியும் கடக்கிறது. இடைவேளை வரை மெதுவாக நகரும் திரைக்கதை கடைசி அரைமணி நேரத்தில் மட்டுமே பரபரப்பாக நகர்கிறது. குறிப்பாக, பல வருடங்களுக்குப் பிறகு ஜெய், ஐஸ்வர்யா ராஜேஷ் சந்தித்துக் கொள்ளும் காட்சியும், அவர்கள் காதல் பின்னணியும் எந்தவிதமான தாக்கமும் இல்லாமல் மேலோட்டமாகவே கடந்து செல்கிறது.

சித்து குமாரின் பின்னணி இசையும் பாடல்களும் கதைக்கு எந்தவிதமான அழுத்தமும் கொடுக்கவில்லை. ரவிவர்மன் நீலமேகம் ஒளிப்பதிவும், பிரசன்னா ஜிகே படத்தொகுப்பும் கதைக்குக் கூடுதல் பலம். ஜெய்யின் நண்பனாக அப்துல் லீ வரும் காட்சிகள் எல்லாம் நகைச்சுவைக்கு குறைவில்லாமல் கதையோட்டத்தில் இயல்பாக ஒன்றியிருப்பது நலம்.

மற்றபடி, தமிழ் சினிமாவில் பல படங்களில் பார்த்து பழகிய முக்கோணக் காதல் கதையையும் எதிர்பார்த்த முடிவையும் இந்த 'தீராக்காதல்' படத்தில் வேறொரு களத்தில் கொடுத்திருக்கிறார்கள்.

# கதவுகள்...!



**என்.கே.ரகுநாதம்**

## (1956ஆம் ஆண்டு எழுதப்பட்ட சிறுகதை)

செல்லத்துரை அன்று விடிவதற்கு முன்பாகவே எழுந்துவிட்டான். எழுந்துவிட்டானாவது? உறங்கினாலல்லவா எழும்புவதற்கு? இரவு முழுவதும் அவனுக்கு உறக்கமே வரவில்லை.

அன்று, அவன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் போவதற்கு எண்ணியிருந்தான். அதனால் அவனுக்கு ஏகப்பட்;ட மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சிப் பெருக்கினால் தான் அவனால் உறங்கவே முடியவில்லை. நினைவுக்குமெட்டாத நீண்ட நெடுங்காலமாக நந்திக்கு மேல் நந்திகள் மறைத்து நிற்க, தாழுக்குமேல் தாழ்

**கந்தசாமி கோயில், தாழ்த்தப்பட்ட மக்கள் வணங்குவதற்கெனத் திறந்துவிடப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டபோது முதலில், அவனால் அதை நம்ப முடியவில்லை**

போட்டுப் பூட்டி வைத்திருந்த கோவில் திருக்கதவு அகலத் திறந்து எல்லோருக்கும் வழிவிட்டு நிற்கிறது. உள்ளே, கர்ப்பக்கிருகத்தில் வள்ளி - தெய்வயானை சமோதரராய் வீற்றிருக்கும் சுப்ரமண்யக் கடவுளுடைய திவ்யஸ்வரூபத் திருக்காட்சியை நேருக்குநேர் தரிசித்து, சாஷ்டங்கமாக விழுந்து வணங்கப்போகிறான் "இந்தத் தமியோனின் பாவங்களையெல்லாம் நிர்மூலம் செய்து, கஷ்டங்களில் இருந்து எனக்கு விடுதலை கொடு அப்பனே?" என்று வேண்டப் போகிறான். எப்படி அவனுக்கு உறக்கம் வரும்?

அவன் ஒரு கள்ளிறக்கும் தொழிலாளி...

கந்தசாமி கோயில், தாழ்த்தப்பட்ட மக்கள் வணங்குவதற்கெனத் திறந்துவிடப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டபோது முதலில், அவனால் அதை நம்ப முடியவில்லை. ஆனால் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துகளில் தலைப்புக் கொடுத்துப் பிரசுரித்திருந்த செய்திகளையும், திறப்புவிழாக் காட்சிகளையும் பார்த்தபோது ஒருகணம் அவன் தன்னை மறந்துபோனான். அவன் உடலெங்கும் புல்லரித்தது. பத்திரிகையைக் கண்களில் ஒற்றியவண்ணம், ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். அப்புறம் தனது கிராமத்துப் பிள்ளையார் கோயிலையும் நினைத்துக் கொண்டான். தன் ஜென்ம பூமியில் யுகயுகாந்திரமாக வீற்றிருந்த தெய்வம் - கத்தி முனையிலே கழைக்கூத்தாடுவதுபோன்ற அவர்கள் ஜீவனத் தொழிலுக்கு உத்தரவாதமளித்துக் காக்கின்ற தெய்வத்தின் திருச் சந்நிதானம் திறந்துவிடப்படும் நாளை எண்ணிப் பரவசமடைந்தான்.

செல்லத்துரை வரகவியல்ல, அருட்கவியுமல்ல, அடித்துக் கிறுக்கியாவது ஒரு பாட்டெழுத முடியாத துரதிர்ஷ்டப் பிறவி. பிள்ளையார் கோவில் திறப்பு விழாவின்போது, அவன் நெஞ்சுருகி நெக்குருகிப் பாட என்ன செய்வான்? பரணிலே புகை மண்டிக் கிடந்த திருவாசகப் புத்தகம் ஒன்றை எடுத்துத்

துடைத்து, பரீட்சைக்குப் படிக்கிற மாணவனைப்போல ஏதோ ஒரு திருவாசகத்தை மனனம் செய்துகொண்டான். நல்லூர்க் கந்தசுவாமிக் கோவிலைத் திறந்த புண்ணியவான்கள், நமது நாட்டுக்கும் வருவார்கள், எங்கள் கோவிலையும் திறந்து வைப்பார்கள் என்று அவன் தினந்தோறும் எதிர்பார்த்திருந்தான் நாட்களை எண்ணிக்கொண்டே காத்திருந்தான்.

நாட்கள் நகர்ந்தன. வாரங்கள், மாதங்களாக உயர்ந்தன.

பிள்ளையார் கோவிலைத் திறந்து வைக்க எந்தப் புண்ணியவான்களும் வரவில்லை. வழக்கம்போல் ஐயர் வந்தார். திறந்து பூஜை வைத்தார். போனார். அவர் தினம்தோறும்தான் வந்து திறக்கிறார். அவர் திறந்த கதவுகளுக்கூடாக யார் போக முடியும்.?

செல்லத்துரை கடைசியில் பொறுமை இழந்து போனான். பிள்ளையார் கிடந்தார். அந்தக் கோயிலைத் திறக்கிற நேரம் திறக்கட்டும். முதலில் நல்லூருக்குப் போய் கந்தசாமி கோயிலை வணங்கிவிட்டு வரலாமென்று தீர்மானித்தான். திறந்த கதவு சாத்திக்கொண்டுவிடும் என்று பயந்தானோ என்னவோ?

*** *** ***

தீட்டி எடுத்த கத்தியும், முட்டியுமாகப் புறப்பட்டு அவசர அவசரமாக அவன் தொழிலை முடித்துக்கொண்டு திரும்பும்போது பொழுது விடிந்து கொண்டிருந்தது. நேரம் ஒன்றும் அதிகமாகிவிடவில்லை. என்றாலும் நல்லார்க் கந்தசுவாமிக் கோவில் எங்கே, பருத்தித்துறையிலே ஒரு மூலையில் உள்ள அவனது வராத்துப்பைளக் கிராமமெங்கே? பஸ் பிடிப்பதற்கே ஒரு மைல் நடக்க வேண்டும். அப்புறம் கட கடத்துப்போன பஸ்ஸிலே இருபது மைல் பிரயாணம் செய்ய வேண்டும். கூடியவரை முதற் பூஜைக்கே போகவேண்டும்.

வீட்டில் நுழைந்தபோது சின்னம்மா இன்னும் உறங்கிக் கொண்டிருந்தாள். அவளது அணைப்பிலே குழந்தை ராணி தன்னை மறந்து தூங்கினாள். வெள்ளையுள்ளம் எதை நினைத்துக் கனவு காண்கிறதோ?

இரண்டு நாட்களுக்கு முன்னர் கோயிலுக்கு வரும்படி சின்னம்மாவைக் கேட்டபோது அவள் மறந்துவிட்டாள். கோயிலுக்குப் போவதற்கு அவளுக்கு நகை ஏது?

"எங்காவது இரவல் வாங்கித் தருகிறேன் வா" என்று செல்லத்துரை கெஞ்சிக் கேட்டான்.

"இரவல் நகை வாங்கிப் போட்டுக் கொண்டுதான் தெய்வ சந்நிதானத்துக்



குப் போகவேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிறதா?'' என்று சின்னம்மா சொல்வதற்குள் அவள் கண்கள் குளம் கட்டிவிட்டன. அப்புறம் கோயிலுக்குப் போகவேண்டும் என்று எண்ணியிருந்த திட்டத்தைச் செல்லத்துரை மாற்றிக் கொள்ளப் பார்த்தான். ஆனால் அவள் விடவில்லை. முட்டி நின்ற கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துவிட்டு, சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "ஈசன் அருள் உண்டானால், எப்போதாவது நல்லாயிருக்கும்போது எல்லோருமாகப் போகலாம். இப்போ குழந்தைக்காக வாகுதல் போயிட்டு வாருங்கள்" என்று அவள் பிடிவாதம் பிடித்தாள்.

செல்லத்துரை, ஒரு கணம் சின்னம்மாவைப் பரிதாபத்தோடும் பாசத்தோடும் பார்த்துக்கொண்டு நின்றான். பின் அவளைத் தட்டி எழுப்பினான். குழந்தையை எழுப்பி ஆயத்தம் செய்யும்படி சொல்லிவிட்டுக் கிணற்றண்டைக்குப் போனான். குளித்து முழுகிவிட்டு வந்தபோது, குழந்தை முகங்கழுவிப் புதுச்சட்டை போட்டுக்கொண்டு முற்றத்தில் நின்று, கூத்தாடியது. சின்னம்மா தேநீர் ஆற்றிக்கொண்டிருந்தாள்.

செல்லத்துரை விரைவில் உடுத்துக்கொண்டு, சைவப் பழம் மாதிரி விபூதி சந்தனமெல்லாம் பூசி அலங்கரித்துக்கொண்டு வெளியே வந்த போது, சின்னம்மா அவனிடம் சிரித்துக்கொண்டே, தேநீரை நீட்டினாள்.

அவன் கணப்பொழுதில் திகைத்து நின்றான். என்றாலும் சமாளித்துக் கொண்டு, "என்ன சின்னம்மா இது? கோவிலுக்குப் போகும்போது தேத்தண்ணி குடித்துவிட்டுப்போவதா?" என்றான்.

"ஏன் எல்லோரும் வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டுத்தானே போகிறார்கள்!" என்றாள் அந்தப் பேதைப் பெண்.

"இதற்காக எல்லோரும் அதைச் செய்ய வேணுமா?" என்று சொல்லிக் கொண்டு தேநீரை வாங்கிக் குழந்தைக்குப் பருக்கப் போனான்.

"அவள் குடித்துவிட்டாள்" என்று சொல்லியபடியே மடியில் வைத்திருந்த பணத்தை எடுத்துச் செல்லத்துரையிடம் கொடுத்தான் சின்னம்மா.

பாவம் அந்தப் பணத்தைச் சேகரிப்பதற்காக அவள் எத்தனை நாள் பசி கிடந்தாளோ? என்னதான் கஷ்டமடைந்தாளோ?

செல்லத்துரை அவளை வாத்சல்யத்துடன் பார்த்தபடியே குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டான்."சரி மத்தியானமே வந்துவிடுவேன், ஏதாவது சமைத்து வை. கோயிலுக்குப் போகிறேன் என்பதை மறந்துவிடாதே" என்று அவள் தூய கறியாக்க வேண்டுமென்பதை நினைவுபடுத்திவிட்டு வெளியே நடந்தான்.

பஸ்ஸிலிருந்து இறங்கும்போதே அவன் உடல் முழுதும் புல்லரிக்கத் தொடங்கியது. குழந்தையை இறக்கிக் கீழே விட்டு விட்டு சால்வையை எடுத்து அரையில் கட்டிக்கொண்டான். அன்று வெள்ளிக் கிழமையாதலால்

கோயிலில் ஜனங்கள் நிறைந்திருந் தார்கள். அரோகரா என்ற சத்தம், பக்தர்கள் பாடுகின்ற ஓசை, கண்டா மணியின் நாதம், சிறுவர்களின் கூக் குரல் இத்தியாதி கூட்டுக் குரலுடன் கர்ப்பூரம் - சாம்பிராணி ஆகியவற் றின் வாசனை எல்லாம் சேர்ந்து அவ னுக்கு ஒருவித புத்துணர்ச்சியை உண்டாக்கிற்று. என்றாலும் பயம் போகவில்லை.

பத்திரிகைகளிலே படித்தாயிற்று. நாலுபேர் சொல்லிக் கேட்டாயிற்று என்றாலும் பயம் விடவில்லை. நானா வது கோயிலின் உட்பிரகாரத்திலே நுழைவதாவது? என்று அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. "உலகமே சேர்ந்து என்னைச் சதிசெய்து கொல் லப் போகிறதோ?" என்று அவன் குழப்பமடைந்தான். யாராவது நம்மவர்கள் - தெரிந்தவர்கள் அகப்படமாட் டார்களா? என்று அங்கலாய்த்தான். என்றாலும் ஒரு துணிவு. அமானுஷ்யமான சக்தி அவனை வழி நடத்திற்று. என்னதான் வந்துவிடும்? வந்தாலும் கடவுள் சந்நிதானம்தானே! என்று தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

## குழந்தையைக் கையில் பிடித்துக்கொண்டு, பயமா பக்தியா என்று இனந்தெரியாத தயக்கத்துடன் அவன் உள்ளே நுழைந்தான்.

குழந்தையைக் கையில் பிடித்துக்கொண்டு, பயமா பக்தியா என்று இனந்தெரியாத தயக்கத்துடன் அவன் உள்ளே நுழைந்தான். அங்கே கோடி தீபங்களின் மத்தியிலே ஜகஜ்ஜோதியாகத் திவ்வியப் பிரகாசத்துடன் விளங்கிய சுப்பிரமணியக் கடவுளின் திருக்கோலத்தைக் கண்டதும் அவனை அறியாமலே ஏதோ ஒரு சக்தி அவன் நரம்புகளெங்கும் பாய்ந்து குமுறியது. "அப் பனே முருகா! சுப்ரமண்யா!" என்று கதறியபடியே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். அவன் பக்தனாகி விட்டான். பக்தனுக்கு நான் என்ற நிலையும் நினைவும் ஏது? மனனம் செய்துவந்த திருவாசகத்தைக் கூட மறந்து போனான். தன் கஷ்டங்களையெல்லாம் சொல்லிக் கண்ணீர் சிந்தினான்.

அவன் சுயநினைவுபெற்று எழுந்திருந்தபோது வெகு நேரமாகிவிட்டது. முடிச்சிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து ஐயரிடம் கொடுத்து அர்ச்சனை செய்வித்தான். அந்த அர்ச்சனைப் பொருட்களை, ஐயரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கிடையில், குழந்தை அவன் வேட்டித் தலைப்பைப் பிடித்திழுத்த வண்ணம் சினுங் கியது.

குழந்தைக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. "பசிக்குது அப்பா அப்பம் வாங்கித் தா!" என்று அது அழத் தொடங்கிவிட்டது.

குழந்தை பசி பொறுக்க முடியாமல் அழுதது. அவன் கையைப் பிடித்துக்கொண்டு எதிரே நடந்தது அங்கே....

பலவித பட்சணங்களையெல்லாம் பரப்பி வைத்துக் கொண்டு கடைகள் திறந்து கிடந்தன. அந்தக் கடை களை நெருங்கியபோது, அந்தப் பட்சணங்களின் வாசனை மூக்கைத் துளைத்தது. செல்லத்துரை குழந் தையைத் தூக்கிக் கொண்டு ஒரு கடைக்குள் நுழைந் தான். ஒரு மேசைக் கரையோரமாகப் போய் உட்கார்ந் தான். குழந்தையை ஒரு நாற்காலியில் உட்காரவைத்தான்.

"என்ன வேணும்? என்ன தின்னப் போகிறாய்?" என்று அவன் குழந்தைIயைக் கேட்டான். குழந்தை நாலு பக்கமும் திரும்பிப் பார்த்தது. அது தன் வாழ்க்கையில் கண்டறியாத பலகாரங்களையெல்லாம் பார்த்துக் குழம் பியது.

"இட்லி சாப்பிடுகிறாயா?"

"உம்"

இட்லி வந்தது. குழந்தை அதைப் பிய்த்துச் சாப்பி டத் தெரியாமல் திண்டாடியது. செல்லத்துரை குழந் தைக்கு உதவி செய்தான். தானே அதைப் பிசைந்து குழந்தைக்கு ஊட்டினான்.

கடையிலே, தேநீர் அடிக்கிற சத்தம், கிண்ணங்கள் ஒன்றோடொன்று மோதுகிற ஒலி, சிப்பந்திகளின் நடமாட்டம், அவர்கள் சிற்றுண்டிகளின் பட்டியலை ஒப்புவிக்கும் இரைச்சல், "கணக்கென்ன?" என்ற முத லாளியின் விசாரணை இவற்றைப் பின்னணியாக்கி யார் யாரோ வருகிறார்கள் போகிறார்கள்.

குழந்தைக்கு இட்லியைப் பிசைந்து ஊட்டியவண்ணம், சிந்தையை முருகன் கழல்களில் சுழல விட்டுக்கொண் டிருந்த செல்லத்துரை, "யாரது செல்லனா?" என்ற குரல் கேட்டுத் திரும்பினான். அப்படியே திடுக்கிட்டுப் போனான். எதிரே நின்றது ஊர்க்காரர், உயர் ஜாதிக் காரர், அவரது முகத்தில் அவமான உணர்ச்சி பீறிட்டது. கண்கள் சிவப்பாக மாறின.

"எப்போதிருந்து இது?" என்று அவர் மறுபடியும் கேட்பதற்கிடையில் அவனைச் சுற்றி ஒரு கும்பல் திரண்டு விட்டது. வாயில் இட்லியை வைத்துக் கொண்டு குதப் பிக் கொண்டிருந்த குழந்தை, கும்பலைக் கண்டு பயத் தால் அழுதது. அதனால் குதப்பிய இட்லி விக்கி, மூச் சடைத்துக் கண்ணீர் வழிந்தது.

காசுப் பெட்டியிலிருந்த முதலாளி நிதானமாக எழுந்து வந்தார். கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

"பட்" என்று ஒரு சத்தம்.

"போடா வெளியே! ராஸ்கல்"

செல்லத்துரை கன்னத்தைக் கைகளால் அழுத்திக் கொண்டு, "முருகா!" என்றான்.

குழந்தை பயங்கரமாக வீறிட்டு அழுதது.

"அந்தத் திமிர்தான் அவர்களுக்கு! இது கோயிலல்ல, கடை!" என்று கூட்டத்திலிருந்த யாரோ சத்தமிட்டார்கள்.

குழந்தையை இரு கைகளாலும் வாரி எடுத்துக் கொண்டு அவன் வெளியே வந்தான். குழந்தையின் அழுகைச் சத் தம் அந்த முருகன் சந்நிதானம் முழுதும் எதிரொலித்தது.



தர்மராசா

சிறைக் குறிப்புகள்...

112

# "கரும்புலிகளைக் கண்டு கலங்கினார்கள்"

சிறைக்குள் அடைக்கப்பட்டிருக்கும்போது தீர்ப்புச் சொல்லப்படும் நிலை நெருங்கும்போது ஏற்கனவே இருந்ததைவிட மனநிலை அதிகம் பாதிப்பாக இருக்கும். நீதிபதி வழங்கப்போகும் தீர்ப்பு விடுதலையைத் தருமா? அல்லது மேலும் பல வருடங்களைச் சிறைக்குள் கழிக்கவேண்டியேற்படுமா? என்ற பயம் ஏற்படும். ஓரிடத்தில் இருக்கவோ, படிக்கவோ, கதைக்கவோ, படுத்திருக்கவோ, நடந்து திரியவோ மனமிருக்காது. இது ஒரு வித்தியாசமான மன உளைச்சலும் அவஸ்தையையும் தரும்.

1997இலிருந்து சிறையில் அடைக்கப்பட்டுப் பூசாச் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுத் துன்பப்பட்ட குருநகரைச் சேர்ந்த மென்சன், செல்வம் ஆகிய இருவரும் 28.6.2002 அன்று விடுதலையானார்கள். 5 வருடங்களுக்குமேல் சிறையிலிருந்த கைதிகள் யாராவது விடுதலையானால் நீண்ட காலம் சிறைக்குள்ளிருக்கும் கைதிகளுக்கு உற்சாகம் பிறக்கும். அதேவேளை அவன் போய்விட்டான் எனக்கு இன்னும் முடியவில்லையே என்ற ஏக்கமும் இருக்கும்.

29.6.2002 அன்று பல கைதிகள் சேர்ந்து பி6 வாட்டைக் கழுவினார்கள். அந்தக் குழுவில் நானும் இருந்தேன். முதலில் தண்ணீர் ஊற்றினோம். பின்னர் சவர்க்காரம் கரைத்து ஊற்றிக் கழுவினோம். நிலத்து நீரைத் துவாய்களால் துடைத்தோம். துவாய்களை விரித்து நிலத்தில் போட்டுத் தண்ணீரை உறிஞ்சச் செய்து நீரை இலகுவாக வெளியேற்ற முடியும். இவ்வாறான விடயங்களைச் சிறைக்குள்தான் கற்றுக்கொள்ள முடிந்தது. சிறைக்குள் எல்லாம் அருமையாகக் கிடைப்பதால் கிடைக்கின்ற பொருள்களை உதாசீனம் செய்யாது பத்திரப்படுத்தி ஒரு பொருளைப் பல தேவைகளுக்குப் பயன்படுத்துவது வழக்கம். இதுபோன்ற பயிற்சிகளும், அனுபவங்களும் சிறையில் பெறும் சிறப்புத் தேர்ச்சியாக இலவசமாக



# நாட்டை விட்டு ஓடும் தமிழர்

**சத்தியநாதன்**

**1977**இல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின்போது மதவாச்சி, அனுராதபுரம், நிக்கவரெட்டியா, நொச்சிகாமம் ஆகிய பகுதிகளில் பெரிய கடைகளையும் களஞ்சியங்களையும் அரிசி ஆலைகளையும் வைத்திருந்த தமிழர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டார்கள். அவர்களின் பொருளாதாரம் முடக்கப்பட்டது. அதில் பலர் கொல்லப்பட்டார்கள். பலரது சொத்துகளுக்குத் தீ வைக்கப்பட்டன. எனினும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நாட்டை விட்டு ஓடவில்லை. **1976**இல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாகத் தமிழீழம் என்ற விடயம் தமிழ் அரசுக் கட்சியால் அறிவிக்கப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டிலேயே அப்போதைய அரச தலைவர் ஜெ.ஆர்.ஜெயவர்த்தனாவால் திட்டமிட்டு இந்த இனக்கலவரம் மேற்கொள்ளப்பட்டது.

**1983 கலவரம்**

ஜெ.ஆர்.ஜெயவர்த்தனாவால் தமிழருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட இரண்டாவது நடவடிக்கையாக **1983** ஜூலை இனக்கலவரத்தைக் குறிப்பிடலாம். அதன் பின்னர் கொழும்பு வாழ் தமிழர்கள் பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறினர். இது ஜெ.ஆரின் திட்டத்துக்குக் கைமேல் பலன் அளித்தது.

நாட்டை விட்டு வெளியேறிய தமிழர்கள் கொழும்பிலும் வடக்குக் கிழக்கிலும் வாழ்ந்த தமது குடும்பங்களையும் படிப்படியாகத் தாம் தஞ்சமடைந்த நாடுகளுக்கு அழைத்தார்கள். இதன் மூலம் வருடா வருடம் நாட்டை விட்டு வெளியேறும் தமிழர் தொகை அதிகரித்தது. உனது எதிர்காலத் திட்டம் என்னவென்று தமிழ் இளைஞனைக் கேட்டால் "வெளிநாடு போவது" என்று சொல்லுமளவுக்கு நிலமை

அனைவருக்கும் கிடைக்கும். சிறைக்குள் இவ்வாறாக வாழும்போதுதான் புரிந்தது சாதாரண வாழ்க்கையில் அன்றாடம் எவ்வளவு விடயங்களை வீண் விரயம் செய்கிறோம் என்று.

**5.7.2002**அன்று பி6 வாட்டில் கரும்புலிகள் தினம் கொண்டாடப்பட்டது. அதில் நான் உரையாற்றினேன். இலங்கை அரசை நிலைகுலையச் செய்தவர்கள் உயிர் ஆயதங்களான கரும்புலிகளே. வடக்குக் கிழக்கில் பெரிய படை நடவடிக்கைகள் பல கைவிடப்படவும் திசை திருப்பப்படவும் காரணமானவர்கள் அவர்கள். வடக்குக் கிழக்குக்கு வெளியே தரையிலும் கடலிலும் நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல்கள் இலங்கை அரசுக்கு மாத்திரமல்லாமல் வடக்குக் கிழக்கில் நடந்த போருக்குத் தலைமை வகித்த படை அதிகாரிகள், அரசியல்வாதிகள், அவர்களது குடும்பங்கள் எனப் பலரை நிம்மதியற்ற சூழலுக்குள் வைத்திருந்ததுடன் நிலைகுலையவும் செய்தது. இத்தகைய தாக்குதல்கள் இனிமேலும் நடந்தால் அரசோ, சிங்கள மக்களோ தாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பதற்காக அவற்றைத் தடுக்கும் நோக்குடன் ஆயுதம் கடத்தியமை, தாக்குதல்களுக்குத் திட்டமிட்டமை, தங்குமிடம் வழங்கியமை, கரும்புலிகளின் நடமாட்டங்களைப் பற்றித் தகவல் கொடுக்கத் தவறியமை ஆகிய காரணங்களுக்காக நூற்றுக்கணக்கானவர்களைச் சிறைப்பிடித்தனர். அதனால் பலர் சிறையில் இருக்கிறோம் -- என்றேன்.

கரும்புலித் தாக்குதல் என்பது ஒரு மனிதனை மட்டும் கொல்வதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. தமிழீழ விடுதலைக்கு எதிராகச் செயற்படுபவர்கள் இனிவரும் காலங்களில் செயற்படப்போகின்றவர்கள், செயற்பட்டவர்கள் என முக்காலத்து எதிரிகளையும் நோக்கி வைக்கப்பட்ட பொறியாகும்.

தலைவர் பிரபாகரனும் அப்போதைய தலைமை அமைச்சர் ரணிலும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பின்னர் இனிக் கரும்புலித் தாக்குதல்கள் நடக்கமாட்டாது என்ற நம்பிக்கையைச் சிங்கள மக்களுக்குக் கொடுத்தது. விடுதலைப் புலிகள் அமைப்பில் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் கரும்புலிகள் என்பது உலகறிந்த உண்மை.

(தொடரும்)



கற்பது, ஆங்கிலம் கற்பது, விரைவு சேவைகளில் கடவுச்செல், நுழைவிசைவு பெறுவது, நாட்டை விட்டு வெளியேறுவது என்பவெல்லாம் வேகமாக நடக்கின்றன.

**கனடாவுக்குள் நுழைதல்**

கனடாவில் வசிக்கின்ற தமிழர்கள் இங்குள்ள தமது குடும்ப உறுப்பினர்களையும் கனடாவுக்கு எடுக்கின்ற திட்டம் ஒன்றைக் கனடா அரசு முன்னடுத்து வருவதாகத் தெரிகிறது. இதில் போரால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே வெளிநாடு செல்லமுடியாது போன பாதிக்கப்பட்ட வறிய மக்கள் பங்கெடுக்க வாய்ப்பில்லை. அங்கு குடியேறியிருக்கின்றவர்களால் அவர்களது உறவினர்கள் உள்வாங்கப்படவே வாய்ப்புகளுண்டு.

மே 18ஆம் திகதியை இலங்கையில் இனப்படுகொலை நடந்த தினமாக அண்மையில் கனடாத் தலைமை அமைச்சர் அறிவித்திருந்தார். அதுவும் கனடாவில் வசிப்பவர்கள் தமது நெருங்கிய உறவுகளைக் கனடாவுக்குள் வரவைப்பதற்கான வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. இதன் பின்னணியில் கடனாவின் வாக்குப் பெறும் அரசியலும் இழையோடியிருப்பதாகவே தெரிகிறது.

**தமிழர் தாயகக் கோட்பாடு**

2009 பேர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர்

மாறியது. "இஞ்சையிருந்து ஒரு பலனும் இல்லை, எங்காவது ஓடித் தப்பிவிட வேண்டும்" என்று கூறும் நிலையே தற்போது காணப்படுகிறது.

**30 வருடகாலப் போர்**

உள்நாட்டில் நடந்த 30வருட காலப் போர்கூடத் தமிழரை நாட்டுப்பற்றுடன் நாட்டில் இருக்கவேண்டும் என எண்ண வைக்கவில்லை. "இஞ்சையிருந்து சாகிறதைவிட ஓடித் தப்புறதே மேல்" என்றே பலர் நினைத்தார்கள். போரால் அதிகம் பாதிக்கப்பட்ட, இழப்புகளைச் சந்தித்த குடும்பங்கள் வறுமைப்பட்ட குடும்பங்களாகவே அதிகம் இருந்தன. ஐரோப்பிய நாடுகளுக்கோ, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகியவற்றுக்கோ செல்ல அந்தக் குடும்பங்களால் முடியவில்லை. இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் மத்திய கிழக்கு நாடுகள் வரை சென்று மிகக் கடினமான தொழில்களைச் செய்து உழைக்கின்ற நிலையே காணப்படுகிறது. அவர்கள் மீளவும் இலங்கைக்கு வருகிற நிலையே காணப்படுகிறது. போர் முடிந்த பின் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா செல்லும் ஆபத்தான பயணத்தைப் பலர் மேற்கொண்டனர். இதில் முன்னாள் போராளிகள் பலரும் இடம்பெற்றனர். இவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதையே மகிந்த தரப்பினரும் விரும்பினர். இவர்கள் கடல்மார்க்கமாக வெளியேறுவதற்குக் கடற்படையின் உதவியை மகிந்த அணியின் முகவர்கள் சிலர் ஏற்பாடு செய்து கொடுத்தனர் என்றும் அப்போது செய்திகள் வந்தன. எந்த வகையிலாவது தமிழர் இலங்கையை வெளியேறுவது நல்லது என்றே சிங்கள ஆட்சியாளர்கள் இன்றுவரை விரும்புகின்றனர். அதற்கு ஏற்றால்போல் தமிழர்களும் செயற்படுகின்றனர்.

**போர் முடிந்த பின் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா செல்லும் ஆபத்தான பயணத்தைப் பலர் மேற்கொண்டனர். இதில் முன்னாள் போராளிகள் பலரும் இடம்பெற்றனர். இவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதையே மகிந்த தரப்பினரும் விரும்பினர்.**

**தற்போதைய வெளியேற்றம்**

தற்போது வடக்குக் கிழக்குப் பகுதி இளைஞர்கள் பலர் வர்த்தக மையங்களிலும் வேறு பல கடினமான தொழில்களுக்காகவும் இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிஸ் போன்ற நாடுகளுக்குச் செல்கின்றனர். அதற்கான ஏற்பாடுகள் மிக வேகமாக நடக்கின்றன. அவ்வாறு செல்வதற்குரிய ஆவணங்களைத் தயார் செய்வது, அவசர அவசரமாக அந்தந்த நாடுகளின் பேச்சு மொழியைக்

2010இல் வடக்குக் கிழக்கில் நூற்றுக்கு மேற்பட்;ட பாலர் பாடசாலைகள் மூடப்பட்டன. தமிழரின் பிறப்பு வீதம் குறைவடைந்தமையே அதற்குக் காரணம். பாலர் பாடசாலைகளில் சேர்வதற்கு மாணவர்கள் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு மேலதிகமாகத் தற்போது நடந்துவரும் தமிழ் இளைஞர்களின் வெளியேற்றமானது இன்னும் பத்து ஆண்டுகள் வரை தொடருமானால், இலங்கையில் மூன்றாவது சிறுபான்மை இனமாகத் தமிழரை ஆக்கிவிடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**தமிழ்த் தலைகளின் அறைகூவல்**

தற்போது பௌத்த விகாரை எதிர்ப்பு, மத அடையாளப்படுத்தல் விடயங்களே தமிழரின் அரசியல்

# மீட்டல்... 14

துன்பானந்த சுவாமி



நாம் இன்று நாவல், அன்னமுன்னா, பாலை, வீரை, இலந்தை, தேசி, விளாத்தி என ஒரு நீள மான பட்டியலைக் கொடுத்தால் அவற்றுள் பல பழங்களை மனிதன் உண்ணலாமா? ஏனக் கேட் கக்கூடிய ஒரு மனிதக் குழுவாக உள்ளோம் என் பது உண்மை. எமது மண்ணுக்கேயான பல பழங் களை மறந்த அல்லது அறியாத ஒரு தலை முறையில் நிற்கிறோம். எமது கல்வி முறையும் இதற்கொரு காரணமாக இருக்கலாம்.

பழங்களைப் பொறுத்தவரை மரபணு மாற்றப் பட்டவை என்பதற்கப்பால் இரசாயனங்களது முழுமையான பயன்பாட்டுடன் பதப்படுத்தப் பட்டவை என்பது முக்கியமான கவனிப்பிற்கு ரியது. சாதாரணமாக சில நாட்களில் நிறம் மாறி விடுகின்றன இயற்கைப் பழங்கள். மறுவழமாக மாதக்கணக்கில் நிறம்மாறாத திறனை சந்தையி லுள்ள பழங்கள் கொண்டிருக்கின்றன. அதற்கான முதனிலைக் காரணியாக இருப்பது செயற்கை இரசாயனக் கல வைகளேதான்.



அரும்பு நிலை யில் தொடங்கும் கிருமிநாசினிப் பிர யோகம் (சிலவேளை களில் தாவர வித் திலிருந்தே நாசி னிப் பிரயோகம் தொடங்கிவிடுகி றது) சந்தையில் குறித்த பழம் காட்சிப்படுத்தப் பட்டிருப்பதுவரை தொடர்கிறது. பழத்தினது சாற்றில், தோலில், உள்ளிருக்கும் சதையில், விதையில் என முழு வதிலும் இரசாயனக்கூறுகளே நிரம்பவும் உள்ளன. மருத்துவர்கள் பழங்களை உண்ணுங்கள் என ஊக்கப்படுத்தும்போது நாங்களும் கண்களுக்குக் கவர்ச்சியானகுறித்த இரசாயனக் கலவைகளையே பழம் என்கிற பெயரில் பணங்கொடுத்து வாங்கி உண்கிறோம்.

இதற்குள்ளே இன்னுமொரு வேடிக்கை மருத் துவர்கள் சிபாரிசு செய்யும் பழங்களோ மரக்கறி கறி வகைகளோ அனேகமாக இரசாயனங் களற் றுக் கிடைக்கக்கூடியவையல்ல என்பதுதான். மரக் கறிகளை அவித்து உண்ணுங்கள், பழங்களை மட்டுமே உண்ணுங்கள் என்று அவர்கள் பட்டிய

என்றாகிவிட்டது. இனப் பிரச்சினை என்று ஒன்றில்லை, மதப் பிரச்சி னையே முக்கிய பிரிச்சினை என் பதுபோல நிலமைகள் திசை திருப்பப்பட்டுள்ளன. இந்த நிலை யில் நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று தமிழ் இளை ஞர்களுக்கு அரசியல்தலைவர்கள் அறிவிப்பு விடுத்தால் அதை யாரும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்போவ தில்லை.

இதுவரை நடத்தப்பட்டட அரசுக்கு எதிரான போராட்டங்க ளில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் அதில் தாம் கலந்துகொண்டதற்கான ஒளிப்படங்களை எடுப்பதிலும் ஆதாரங்களைத் திரட்டுவதிலுமே தீவிரம் காட்டினர். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை யான ஊர்வலம், உணவுதவிர்ப்புப் போராட்டங்களில் தமது முகங்க ளைக் காட்டிப்படம் எடுப்பதிலேயே குறியாக இருந்தனர். அவற்றை வெளிநாட்டில் உள்ள நண்பர்களுக் கும் குடும்ப உறவினர்களுக்கும் அனுப்பிப் பின்னர் அவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று முள்ளனர். அரசுக்கு எதிரான போராட்டங்களில் தாம் ஈடுபட் டதன் காரணமாக இலங்கையில் இருந்தால் கொல்லப்படுவோம் என்று காரணம் காட்டிப் புகலிட அந்தஸ்தை இவ்வாறு கோரும் தமிழ் இளைஞர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவ்வாறு வெளிநாட்டுக்குச் செல்பவர்கள் எதையெல்லாம் செய்யவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆலோ சனை கூறும் காணொலி ஒன்றும் சமூக வலைத்தளங்களில் உலா வந்ததையும் இதற்குச் சான்றுப்ப டுத்த முடியும்.

1983இல் ஜெ.ஆரால் தொடக்கி வைக்கப்பட்ட நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கை இன்று வரை முக்கிய இடம்பிடித்து வருவதில் தமிழ் அரசியல்வாதி களின் பொறுப்பின்மைக்கும் அதிக பங்குண்டு. போர் முடிந்து 14 ஆண்டு கழிந்தபின்புங்கூடத் தமிழ் மக்கள் இந்த மண்ணில் நம்பிக்கையுடன் வாழ்வதற்கான எதையும் தமிழ் அரசியல்வாதி களால் செய்ய முடியாது போனது அவர்களினதும் அவர்கள் செய்து வரும் அரசியலினதும் பெருங் குறைபாடாகும்.

விடுபவை வணிகப் பண்டங்களேஎன்பதால் மர பணு மாற்றத்துக்குள்ளாகி இரசாயனங்கள் ஊட் டப்படாதவை அப்பட்டியலுக்குள் அகப்படுவது அபூர்வமே.

இவை ஒருபுறமிருக்க பழச்சாறு, பழப்பாகு (ஜாம்) என்றும் சத்தூட்டப்பானம் (எனெர்ஜெற்றிக் ட்றிங்ஸ்) என்றும் பழங்களை நினைத்துக்கொண்டு நாம் வாங்குபவை பழங்களாலானவைதானா? என்றால் நிறமும் சுவையும் ஊட்டப்பட்ட ஒரு இரசாயனக் கலவைதான் அவை என்பதுதான் யதார்த்தம். அதனை விளங்கிக்கொள்ளும் ஆற் றல் மங்கியவர்களாகவே நாங்கள் இருக்கிறோம் என்பதே வெட்கப்படவேண்டிய உண்மை. ஆற றிவு கொண்டவர்கள் என்று பெருமை கொள்வதற் கான அடிப்படைத் தகைமைகளே அற்றவர்களா கவே இருக்கிறோம்.

இவ்வாறான செயற்கை இரசாயனச் சேர்க்கை கள் எமது சமிபாட்டுத் தொகுதியை சிறுகச் சிறுக அரித்துக்கொண்டே போகின்றன. ஒரு கட்டத்தில் (அனேகமா இறுதியில்தான்) கையை மீறிப் போய் விடுகிற நிலையில்தான் எமது உள்ளுறுப்புகள் அழிவடைந்தோ அல்லது மோசமாகச் செயலி ழந்தோ போயிருப்பதை அறிந்து அலறுகிறோம். ஆதற்கான நிவாரணம் அல்லது பரிகாரமென இதுவரை மறைமுகமாக உள்ளெடுத்த செயற்கை இரசாயனங்களுக்கு மேலதிகமாக நேரடியாகவே பயங்கர இரசாயனங்களை நோய்நிவாரணி என் கிற பெயரிலுள்ள நம்பிக்கையுடன் உட்கொள்கிறோம்.

எமது உடலினது ஒரு பாகத்திலுள்ள பிரச்சனை யைத் தீர்ப்பதற்காக மற்றையபகுதிகளைப் பிரச்ச னைக்கு உள்ளாக்குகிறோம். அதுவும் மருத்துவர் களது அலோசனையுடனும் ஆதரவுடனும் என் பது வேதனையான வேடிக்கையாகவல்லவா இருக்கிறது? எப்போதும் சனக்கூட்டமாயுள்ள மூன்று இடங்கள் எது? என்பதை யோசித்துள் ளோமா?

முதலாவது சாப்பாட்டுக்கடை. இரண்டாவது மதுபானச்சாலை. மூன்றாவது மருந்தகம். இதில் முதலிரண்டு இடங்களிலும் சிறுகச் சிறுக எம்முட் செலுத்திய இரசாயனங்களது செறிவைவிட மூன் றாவதாகக் குறிப்பட்ட மருந்தகங்களில் அதிக ளவில் இரசாயனங்கள் செலுத்தப்படுகின்றன என் பதே இன்றைய யதார்த்தமாக உள்ளது. இதற்கான மாற்றுத் தீர்வுதான் என்ன?

எம்முன்னோரது வாழ்க்கை முறைக்கு குறிப் பாக உணவு முறைக்கு மாறுவதைத்தவிரவேறு வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை. விரைவு உலகமென்பதில் எமதுவாழ்க்கை முடிவும் விரை வாகிவிட்டது என்பதைக் கண்டுகொள்ளவோ ஏற் றுக்கொள்ளவோ எமக்கிருக்கும் பகுத்தறிவு போதாது என்பதை ஏற்றுக்கொண்டு தீர்வை நோக்கி நகரத் தயாராக எம்மில் பலர் தயாராக இல்லை என்கிற யதார்த்தமானது உணர்ந்து ஏற்று க்கொள்ளப்படல் அவசியமானது.

எமது ஆரோக்கியக்கேட்டிற்கு எமது உணவுப் பழக்க மாற்றம் மட்டுந்தான் காரணமா? காரணங் கள் நீளமாகப் பட்டியலிடக்கூடியளவில்தான் உள் ளன. சிந்திக்கவும் பேசவும் விடயங்கள் ஏராள முண்டு. பேசுவோம்.



# மூளைக்குப் பஞ்சமோ?

அண்டைக்கதிலை ரவுணுக்கொரு அலுவலாய் வெளிக் கிட கனகரும் அலுவலெண்டார் 'அப்ப வாவன் சேந்து போவம்' எண்டன் 'என்னண்ணை உங்கடை மோட்டச் சயிக் கிளிலையோ? இழுக்குமோ?' எண்டு கேட்டுச் சிரிச்சுக் கொண்டு கூட வந்தார். காங்கேசந்துறை றோட்டாலைதான் போனம்.

றோட்டு அவ்வளவு சனமில்லை. வாகனங்கள்கூட கனக்க இல்லை. பலதையும் கதைச்சபடிபோய் போன அலுவலுகளை முடிச்சுக்கொண்டு திரும்பவும் வந்தம். குழப்பிட்டிச் சந் திக்கு அங்காலை றோட்டு முழுதையும் பிடிச்சுக்கொண்டு பெரிய கூட்டம்... வாகனங்களும் சனமுமாய்... 'அடக் கோதாரி ஏதாலும் அக்சிடன்ரோ? சுனத்தைப்பாருங்கோ' எண்டு பின்னாலையிருந்த கனகர் கத்தினார்.

'அதோ?...வழமையானதுதான்...ரியூட்டறி முடியிற நேரமல்லே? அப்பிடித்தான் கிடக்கும் உவடம்.. என்ன அவசரம் இதிலை கொஞ்சநேரம் நிண்டிட்டுப் போவம்' எண்டுகொண்டு மோட்டச் சைக்கிளை ஓரமாய் நிப்பாட்டி னன். கனகர் இறங்கி புதினம் பாக்கத் தொடங்கினார். நானும் இறங்கி நிண்டுகொண்டன். 'என்ன கதிரேசண்ணை? பேரப் பிள்ளையள் ஆராவது படிக்கினமோ?' எண்ட குரலைக் கேட்டுத் திரும்பினால் சுந்தரத்தார் சிரிச்சபடி நிண்டார்.

'என்னப்பா சுந்தரம்? ஏன்ன இதிலை? ஊர்ப்பக்கம் காணக் கிடைக்கிறேல்லை..' எண்டன். 'ஓஓஓ...வாறயில்லை.. காணி வித்தபிறகு வந்தென்ன எண்டுதான்....' எண்டு ஒரு இழுவை இழுத்தார். கவலை குரலிலை இருந்துது. 'ஓஓ அதுசரி இஞ்சை இதிலை?' எண்ட கனகற்றை குரலைக் கேட்டிட்டு 'அட கனகு நீரும் என்ன இதிலை' எண்டார் சுந் ரத்தார். நாங்கள் காரணத்தைச் சொல்ல சரிச்சார். 'நான் நடக் கிறதுக்காக வந்தனான்..நடக்கவே ஏலாது...சில வேளைய

ளிலை இப்பிடித்தான் மாட்டுப்படுறனான் மோட்டச்சைக் கிள்ளை நீங்கள்.... நிண்டிட்டுப் போறதுதான் நல்லது' எண்டார்.

'வழமையாய் இப்பிடித்தானோ?' எண்டு கேட்டார் கனகர். 'ஓஓ.. நெடுகவும் இப்பிடித்தான் கொல்பாடு... சீய்க்... ஒருவிதமான யோசினையும் இல்லாத மனிசர் எல்லாருக்கும் அவசரம்..அந்தரம்' எண்டு சுந்தரத்தார் புறுபுறுத்தார். 'கார், ஓட்டோ, மோட்டச்சைக்கிள், சைக் கிள், கையேஸ் எண்டு எல்லாவிதமான வாகனங்களும் பிள்ளையளை ஏத்திறதுக்காக நெருக்குப்பட்டுக்கொண்டு



நிக்குதுகள்' எண்டு நான் சொல்ல 'சில நாளுகளிலை ஏஜீஏ கந்தோரான் பிக்கப்பும் வாறது' எண்டு சிரிச்சார் சுந்தரத் தார்.

'அப்பிடியெண்டால் இந்த இடத்துநெருக்கடி அவைக் கும் தெரியும் என்ன?' எண்டு கேட்டார் ஆவலோடை கனகர். 'ஓஓ..ஓஓ..வடிவாத் தெரியும்...தெரிஞ்சதாலை தானே பேப்பரிலை பெரிய இடம் அறிக்கை விட்டிருந்த தல்லே? பொலிசைப் போடப்போறம் கண்காணிக்கப் போறம்.. கட்டுப்படுத்தப்போறம்... அது இதுவெண்டு? நடைமுறையிலை காணேல்லை' எண்டு சலிச்சார் சுந்த ரத்தார்.

'நாங்கள் வரேக்கை இவடத்திலை சனஞ்சாவடி ஒண்டு மில்லாமல் கிடந்தது..' எண்டு சந்தேகம் கிளப்பினார் கனகர். 'அப்பிடித்தான் கிடக்கிறது.. வரேக்குள்ளை ஒவ் வொரத்தர்ரண்ட பேராய்த்தானே வருவினம் ஆனால் முடியிறது ஒண்டாயல்லே? எல்லா வகுப்புகளையும் ஒண் டாய் முடிக்கிறதாலைதான் முழுச்சனமும் முழுப்பிள்ளை யளும் றோட்டிலை நிண்டு இடிபடுகுதுகள்...' எண்டு கோவத்தோடை சொன்னார் சுந்தரத்தார்.

'அதை ஒவ்வரு வகுப்பை ஒவ்வரு நேரமாய்க் கொஞ் சம் முந்திப் பிந்தி முடிச்சு வெளியாலை விடலாமல்லோ?' எண்டு எரிச்சலாய்ச் சிரிச்சார் கனகர். 'அது உன்னைப் போலை என்னைப்போலை ஆக்களுக்குத்தான் விளங் கும்...எல்லாருக்கும் விளங்காது' எண்டன் நான். 'கதிரே சண்ணை சரியாத்தான் சொன்னியள்... உதுக்குள்ளை விளம்பரமும் இருக்காம்... உப்பிடி அள்ளுகொள்ளையாய் கிறவுட்டைக் காட்டினால் உங்கைஏதோ விசயம்இருக் கெண்டு ஆக்கள் கூடுதலாய் வருவினமாமல்லே?'எண்டார் சுந்தரத்தார்.

'நங்கடை ரியூசனுக்குத்தான் வரவேணுமெண்டதுக்காக சோதினைப் பேப்பரிலை விளையாட்டுக்காட்டின கதை யுமொண்டு இருக்கல்லே?' எண்டுமெதுவாச் சொன்னார் கனகர். 'கதையில்லை உண்மைதான் என்ரை பேரன்ரை சோதினையிலைதான் நடந்திருக்கு' எண்ட உறுதியாச் சொன்னார் சுந்தரத்தார். 'எல்லாம் நடக்கும்...இது வியா பாரஉலகமல்லே இது? கல்விதான் பெரிய மூலதனம் எண்டுறதுக்காக அதையே பெரிய வியாபாரமாக்கியாச்சு... அப்பிடியல்லோ?' எண்டுகொண்டு வெளிக்கிட்டிட்டன். தெருவில் சனமும் குறைஞ்சிட்டுது. கனகர் பாய்ஞ்சு ஏறிக்கொண்டார் சுந்தரத்தாரும் நடக்கத் தொடங்கினார். நானும் ஸ்ராட் பண்ணிக்கொண்டு வந்திட்டன்.

---

# வாசுதேவன் கவிதைகள்

*வயல் மேல்*
*நிலவு*
*கதிர் நுனிகளில்*
*நெல் மணிகளை*
*சினை வைக்கிறது*



*மெல்ல மெல்ல*
*மலையின் பின் இருந்து*
*நகர்ந்து நகர்ந்து*
*மேலேறி வந்து விடுகிறது*
*நிலவு*
*இப்போது நிலவை*
*அண்ணாந்து பார்த்தபடி*
*நிற்கிறது மலை*

# ஏன்...?

நட்சத்திரா

# அப்டி...?

## கீழைத்தேசத்து எழுத்துகள் வளைவுகளாக இருப்பது ஏன்...?

52

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண |
| K | NG | CH, S | GN | D,T | NN |
| த | ந | ப | ம | ய | ர |
| TH, DH | N | P, B | M | Y | R |
| ல | வ | ழ | ள | ற | ன |
| L | V | Z | LL | RR | N |
| ஜ | ஸ | ஷ | க்ஷ | ஹ | ஸ்ரீ |
| J | SS | SH | KSH | H | SHRi |

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் பயன் பாட்டிலுள்ள மொழிகளின் எழுத்துகள் வளைந்த எழுத்துகளாக இருப்பதைக் காணலாம். அவ்வாறு அவை வளைந்திருக்கக் காரணம் என்ன..? இதற்கு மாறாக, ஐரோப்பிய நாடுகளின் எழுத்துகள் நேர் கோட்டு எழுத்துகளாக இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன... இவை பலருக்கும் தெரியாத சங்கதிகள்.

கீழைத்தேச எழுத்துகள் ஆரம்பத்தில் ஓலைச் சுவடிகளிலேயே எழுதப்பட்டன. ஓலைகளில் எழுத்தாணியால் நேர் எழுத்துக் களை எழுதினால் அந்த எழுது கருவியால் (எழுத்தாணி) ஓலை கிழிக்கப்பட்டுவிடும். அதனால் எழுத்துகளை நேராக எழுதுவதைத் தவிர்த்து அதிக வளைவுகளுடன் எழுதினார்கள். அதேவேளை "க்" போன்ற குற்றெழுத்துகளுக்கு மேலுள்ள குற்றுப் போடுவதில்லை. அவ்வாறு எழுத்தாணியால் குற்றுப் போட்டாலும் ஓலை கிழிந்துவிடும் என்பதால் அது தவிர்க்கப்பட்டது. இவ்வாறு கீழைத்தேசத்தில் பழங் காலத்தில் எழுத்துகளை எழுதும் முறை ஓலைச்சுவடிகளில் ஆரம் பிக்கப்பட்டமையாலேயே எழுத் துகளை நேராக எழுதாமல் வளை வுகளுடன் எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் எழுத்துகள் வIளைவுடையனவாகத் தோற்றம் பெற்றன.

கீழைத்தேசத்தைப் போலில்லாமல் ஐரோப்பிய எழுத்துகள் களிமண் தகடுகளில் எழுதப்பட்டன. இதனால் அவை பெரும்பாலும் நேர் கோட்டு எழுத்துக்களாக எழுதப்பட்டன. ஐரோப்பிய நாடுக ளிலும் ஓலையில் எழுதி வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தால் அந்த எழுத்துகளும் வளைந்த எழுத்துகளாகவே இருந்திருக்கும்.

# புணர்ச்சி விளையாட்டு....?



காமினி

**ஆசியப் பகுதியில் இந்தச் செய்தி சூடு பிடித்ததுடன் கொடி கட்டியும் பறந்தது. முழுமையான உண்மைத் தன்மை இல்லையே தவிர, செய்தியில் ஆங்காங்கே சில உண்மைகள் இருந்தன**

இந்திய ஊடகங்களில் வெளியாகி ஈழம் வரை பிரபலமாகிய செய்தி ஒன்று உலகையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது. காரணம், அந்தச் செய்தி அப்படிப்பட்டது...! மக்கள் மனதில் கிளு கிளுப்பை விதைக்கும் வண்ணம் பரவிய அந்தச் செய்தி மிக வேகமாகப் பலரையும் தன் பக்கம் ஈர்த்தது. சுவீடன் நாட்டில் உடலுறவுப் போட்டி ஒன்று நடக்கவிருக்கிறது என்றும் அந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்குப் பலர் விண்ணப்பித்திருக்கிறார்கள் என்றும் உலகில் முதல் முலாக உடலுறவில் ஈடுபடுவதைப் போட்டியாக்கியிருக்கிறார்கள் என்றும் விவரித்து அந்தப் போட்டியில் ஈடுபடுவதற்குரிய விதிமுறை, போட்டியில் கவனிக்கப்படும் உடலுறவு அம்சங்கள், உடலுறவு நுணுக்கங்கள் எனப் பல விடயங்களைப் புட்டுப் புட்டு வைத்து வெளியாகிய அந்தச் செய்தி ஆங்கிலத்திலும் தமிழிழுமாகப் பலரைக் கிறங்கடிக்கவும் செய்தது. இதென்ன புதுவித போட்டியாக இருக்கிறதே...? இதற்கு எப்படிப் புள்ளி வழங்குவார்கள்,..? இதில் எப்படித் திறமைகளை நிரூபிப்பார்கள்;...? என்றெல்லாம் பலரின் சிந்தனை அலை பாய்ந்தது. இத்தகைய பல காரணங்களால் இந்தச் செய்தியும், அதன் பரவலும் நம்மவர் மத்தியில் தீயாயிற்று....!

**செய்தி தோன்றிய புள்ளி**

கடந்தவார இறுதிப் பகுதியில் இந்திய ஊடகங்கள் சிலவற்றில்தான் இந்தச் செய்தி வெளியானது. அந்தச் செய்தியின்படி, சுவீடனானது உடலுறவு கொள்வதைத் தேசிய விளையாட்டாகப் பதிவு செய்துள்ளது என்றும், அதன்படி ஜூன் மாதம் 8ஆம் திகதியன்று ஐரோப்பாவில் அந்த விளையாட்டு நிகழ்வை நடத்தவுள்ளது என்றும் செய்தியிடப்பட்டிருந்தது. அதற்கு ஆங்கிலத்தில் "யூரோப்பியன் செக்ஸ் ஷம்பியன்ஷிப்" என்றும் பெயரிட்டிருந்தன செய்திகள். எந்த முகாந்திரமும் இல்லாமல் இந்தச் செய்திகள் வெளியாகினவா...? என்றால் அதுதான் இல்லை. இத்தகைய ஒரு புதினமான விளையாட்டுக்கு அங்கீகாரம் பெறும் முயற்சிகள் சுவீடனில் நடந்து கொண்டுதானிருக்கின்றன. உடலுறவுக் கலாசாரத்தைச் சர்வ சாதாரணமாகக் கடந்து செல்லும் ஐரோப்பாவில் இந்த விடயம் பெரிய பேசுபொருளாக எழவில்லையாயினும் அதைப் புதினமாகப் பார்க்கும் இந்திய - ஆசியப் பகுதியில் இந்தச் செய்தி சூடு பிடித்ததுடன் கொடி கட்டியும் பறந்தது. முழுமையான உண்மைத் தன்மை இல்லையே தவிர, செய்தியில் ஆங்காங்கே சில உண்மைகள் இருந்தன. அந்த விளையாட்டைச் சுவீடன் அங்கீகரித்துவிட்டது என்பதும், அந்த விளையாட்டுக்குரிய நிபந்தனைகள், விளையாட்டு முறைகள், விதிகள் என அறிவிக்கப்பட்டவையும் என ஒருபடி மேலேபோய்ச் செய்தியைப் பிரபலமாக்கச் செய்ய முயன்ற சோடனைகளால் தான் செய்தி போலிச் செய்தியானது. ஆனால், அது முற்றிலும் போலியானதா...? என்றால் அதுதான் இல்லை.

**உண்மை என்ன...?**

"ஸ்வீடிஷ் ஃபெடரேஷன் ஒவ் செக்ஸ்" என்கிற அமைப்பின் தலைவரான ட்ராகன் பிராட்டிச் என்பவர் பாலுறவில் ஈடுபடுவதை விளையாட்டாக அங்கீகரிக்குமாறு



சுவீடனின் தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பினார். அந்த விண்ணப்பத்தை தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு நிராகரித்தது. ஸ்வீடிஷ் செக்ஸ் ஃபெடரேஷனின் விண்ணப்பம் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும், அது 'முழுமையற்றது' என்று அதற்குக் காரணமும் கூறியது தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு.

இந்தச் செய்தியை வெளியிட்ட பல ஊடகங்கள் அந்தச் செய்தியின் ஒருபகுதியாக ஸ்வீடிஷ் விளையாட்டுக் கூட்டமைப்பில் உறுப்பினராகி விட்டதாகச் செய்திகளை எழுதின. இது ஸ்வீடிஷ் விளையாட்டு கூட்டமைப்பின் கவனத்தை ஈர்த்தது. ஸ்வீடிஷ் விளையாட்டுக் கூட்டமைப்பில் உறுப்பினராகப் பாலியல் கூட்டமைப்பு இல்லை. இந்தத் தகவல்கள் அனைத்தும் தவறானவை - என்று ஸ்வீடிஷ் விளையாட்டுக் கூட்டமைப்பின் பேச்சாளர் அன்னா செட்ஸ்மேன் கூறினார். ஆக, பாலுறவில் ஈடுபடுவதை விளையாட்டாக்குமாறு சுவீடனில் கோரிக்கைகள் எழுந்திருப்பதும், அதற்குரிய முயற்சிகள் நடந்திருப்பதும் மாத்திரமே உண்மை. இது விளையாட்டாக அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்கிற செய்தி மாத்திரமே போலி. சிறுதுளி உண்மையும் பெருமளவு பொய்யையும் கொண்டிருந்ததால் அந்தச் செய்தி முற்றிலும் போலியானது என்று முடிவுக்கு வந்துவிட முடியாது. இப்படியொரு "விளையாட்டுச் செய்தி" எதிர்காலத்தில் நிஜத்தைத் தாங்கி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# மோசம் பேதால்....!

## இந்த வாரச் சொல்

நம்மவர்கள் மத்தியில் வழக்கிலுள்ள பேச்சாடல்களில் ஒன்று "மோசம் போதல்". குடும்பத்திலோ, சமூகத்திலோ, அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் யாராயினும் இறந்து விட்டால் "அவர் மோசம் போயிட்டாராம்" என்று பேச்சுவாக்கில் கதைப்பது வழக்கம்.

"பரமன்னை மோசம் போயிற்றாராம் அறிஞ்சனிங்களோ...?"

"கடைக்காரச் சிவத்தின்ற பொடியன் மோசம் போயிற்றாம், கடை பூட்டிக் கிடக்கு"

"எங்கட அப்பா போன சித்திரைதான் மோசம் போனவர்"

"அம்மா மோசம்போய் ஒரு வருசமாகயில்லை. அதுதான் நாங்கள் கோயில் குளத்துக்குப் போறதில்லை" என்கிற வாக்கியங்கள் இதற்கு உதாரணங்கள்.

மோசம் போதல் என்பது மூலம் இறப்பைக் குறித்தாலும், இறந்தவர்கள் மோட்சம் போவார்கள் என்கிற நம்பிக்கையால் தோன்றிய பேச்சு வழக்காகவே இது காணப்படுகிறது.

இறந்தவர்களின் ஆத்மா மோட்சமடைதல் என்றிருக்கிற நம்பிக்கையின்பால் பிறந்த மோட்சம் என்பது உச்சரிப்பு மாற்றம் பெற்றுப் பேச்சு வழக்கில் மோசம் போதல் என்பதாயிற்று. காலப்போக்கில் இறப்பதைச் சுட்டும் நாகரீக மொழியாகவும், மறைமுகச் சொல்லாகவும்கூட மாறிற்று. இவையே தற்போதுள்ள "மோசம் போதல்" என்கிற பேச்சு மொழிக்குப் பின்னாலுள்ள அர்த்தங்கள்.

இதைவிட ஒருவர் மீதுள்ள நம்பிக்கையை இழக்கும் பட்சத்திலும், நெருங்கியவர்களால் துரோகமிழைக்கப்படும் பட்சத்திலும்கூட "அவனை நம்பி நான் மோசம் போயிற்றன்" என்பதாக இந்த மோசம் போதல் பயன்பாட்டிலுள்ளது. தவிர, மோசம் என்பதும் வேறு பல அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது. "இங்கு நுளம்பு சரியான மோசம்", "அவளின்ர மனுசன் படு மோசமான ஆள்" "அவையின்ர இடத்தில யானைகள் படுமோசம்" என்பவை இதற்கு உதாரணங்கள்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.06.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781